வேளாண்மைக் கலைச் சொற்கள்

அகரவரிசை - 1 விதைத்தொழில் நுட்பவியல்

அங்கணம் [illegible]

வேளாண்மைக் கலைச் சொற்கள்

அகர வரிசை - 1

# விதைத் தொழில் நுட்ப இயல்

டாக்டர். உ. அஞ்சனம் அழகன்

உமாமணி பதிப்பகம்

நாகர்கோவில்-2.

வேளாண்மைக் கலைச்சொற்கள்
அகர வரிசை—1
[ஆங்கிலம் - தமிழ்]

# விதைத் தொழில் நுட்ப இயல்

டாக்டர் உ. அஞ்சனம் அழகன், M.Sc. (Ag.) Ph.D.
இணைப்பேராசிரியர்
தோட்டவளர்ப்பியல் கல்லூரி
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003.

உமாமணி பதிப்பகம்
நாகர்கோவில்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வேளாண்மைக் கலைச் சொற்கள்<br>அகரவரிசை 1<br>விதைத் தொழில் நுட்ப இயல்<br>**A GLOSSARY OF AGRICULTURAL TERMS I**<br>**SEED TECHNOLOGY** |
| ஆசிரியர் | : | டாக்டர். உ. அஞ்சனம் அழகன் |
| பதிப்புரிமை | : | © டாக்டர் உ. அஞ்சனம் அழகன் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு-ஏப்ரல் 1989 |
| பதிப்பகம் | : | உமாமணி பதிப்பகம்<br>''ருக்மா''<br>பாரதி நகர்<br>நாகர்கோவில் - 629 002<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| அச்சகம் | : | பாரதி அச்சகம்<br>செட்டிகுளம் சந்திப்பு<br>நாகர்கோவில் |
| விலை | : | ரூபாய் எட்டு |

# அணிந்துரை

இன்றைய அறிவியல் உலகம் வியக்கத்தக்க பல சாதனைகளை விரைவாகச் செய்து கொண்டிருக்கிறது. அறிவியல் சுவடிகள் உலக மொழிகளில் குறிப்பாக ஆங்கிலத்தில் தினந்தோறும் மிகுதியான எண்ணிக்கையில் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இவ் அறிவியல் கட்டுரைகளில் காணப்படும் கருத்துகளும், சொற்களும் புதியதாக உள்ளன. இக்கருத்துக்களை நமது தாய்மொழி வாயிலாக பயில்வதும், உழவர்களுக்குப் பரப்புவதும் வேளாண்மைப் புரட்சிக்கு உறுதுணையாக அமையும். வேளாண்மைப் புரட்சி மட்டுமே இந்தியத் துணைக்கண்டத்தில் ஒரு சில காலகட்டங்களில் தலைதூக்கும் பஞ்சத்தையும் பட்டினியையும் விரட்டும் வல்லமை பெற்றவை என்பதை யாரும் மறுக்கமுடியாது.

தமிழில் வேளாண்மை அறிவியலின் பல வாசல்களையும், வண்ண வடிவங்களையும் திறந்துவைப்பதற்கு, அறிவியற் கலைச்சொற்கள் மிகுதியாகத் தேவைப்படுகின்றன. இத்தகைய கலைச்சொற்களை எல்லா துறைகளிலும் நாம் உருவாக்கினுல்தான் நமது தாய்மொழி வாயிலாக இன்றைய அறிவியலை அறியமுடியும்; பரப்பமுடியும்.

தமிழ்மொழி பழமையான மொழி; இலக்கிய வளமும் இலக்கண வளமும் செறிந்த மொழி. தமிழ்மொழி அறிவியல் சொல்லாக்க முயற்சிக்கு மிகுதியாக ஈடுகொடுக்கும் மொழி என்பதிலும் ஐயமில்லை. தமிழில் இம்முயற்சி மற்ற அறிவியல் துறைகளில் நடந்து கொண்டிருந்தாலும் வேளாண்மைத்துறையில் இப்பொழுதுதான் கால்கோள் இடப்படுகிறது.

வேளாண்மை அறிவியலில் ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்களை உருவாக்கும் கடினமான முயற்சியில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இணைப்பேராசிரியர் டாக்டர். உ. அஞ்சனம்

அழகன் ஈடுபட்டுள்ளார். அவர் கடந்த இருபத்திஐந்து ஆண்டுகளாக இப்பணியில் இறங்கி, தமிழில் ஏழு வேளாண்மை நூல்களையும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

அவர் விதைத்தொழில் நுட்ப இயலில் (Seed Technology) காணப்படும், முக்கியமான ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ் சொற்களை உருவாக்கி இந்நூலாகத் தந்து உள்ளார். இது ஒரு பாராட்டத்தக்க செயலாகும். நூலில் காணப்படும் தமிழ் கலைச்சொற்கள் எளிதாகவும், யாவரும் புரிந்து கொள்ளும் வகையிலும், எல்லாரும் எடுத்தாளும் நிலையிலும் உள்ளன. இம்முயற்சியைத் தொடர்ந்து மேலும் பல துறைகளிலும் இத்தகய நூல்களை வெளியிட்டு தமிழைச் செழுமைப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நூலைப் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும், பள்ளிகளும், அலுவலகங்களும், உழவர் பெருமக்களும் பயன்படுத்திக்கொண்டால் வேளாண்மை அறிவியலின் முழுப்பயனையும் விரைவில் அடைய வழி கிடைக்கும்.

**டாக்டர். எம். எஸ். சுவாமிநாதன்**
தலைவர்,
அனைத்துலக சுற்றுச்சூழல்
மேம்பாட்டுக்கழகம்.

தேதி: 10-4-'89,
புதுடெல்லி.

டாக்டர் சோ. ஜெயராஜ், பிஎச்.டி
துணைவேந்தர்
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் – 641 005

# அணிந்துரை

''வேளாண்மை அறிவியல்'' நாளுக்கு நாள் பல திசைகளில் பல வடிவங்களில் வளர்ந்து கொண்டிருக்கிறது. புதிய பல ஆங்கிலச் சொற்களும், இலத்தீன் சொற்களும், மற்ற மொழிச்சொற்களும் இவ்வறிவியலில் நாளுக்கு நாள் பிறந்து கொண்டிருக்கின்றன. அறிவியலின் வளர்ச்சியைப் போலவே, இச்சொற்களின் வளர்ச்சியும் நம்மைத் திகைக்கச் செய்கின்றது.

தமிழில் வேளாண்மைக் கருத்துக்களை மிகுதியாக எழுதவும், பேசவும், பரப்பவும் ஒவ்வொரு துறைதோறும் ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்க் கலைச் சொற்கள் அவசியம். வேளாண்மைக் கல்வியின் வெற்றி இதன் கூட்டுச்செயலாக்கத்தில் அடங்கியுள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இது ஒரு காலக்கட்டத்தில் செய்து முடிக்கவேண்டிய மிகப்பெரிய பணி. இப்பணியின் பின் விளைவுகள் தமிழ் உழவர்களின் பொற்காலத்திற்கு அடிப்படையாகும். வேளாண்மைப் பட்டக்கல்வியைத் தமிழில் கொண்டுவரும் முயற்சிக்கும் இது உறுதுணையாக அமையும். தமிழில் வேளாண்மை நூல்களை மிகுதியாக எழுதவும் பயன்படும்.

கடந்த 25 ஆண்டுகளாக வேளாண்மைக் கருத்துக் களை நூல்களாகவும், கட்டுரைகளாகவும் தமிழில் எழுதி வரும் இணைப்பேராசிரியர் டாக்டர். உ. அஞ்சனம்அழகன் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளது மிகவும் பாராட்டத்தக்க தாகும்.

வேளாண்மையின் அடிப்படை விதைகளில் ஆரம்ப மாகும். அதைப்போல் வேளாண்மை அறிவியலின் கலைச் சொல்லாக்க முயற்சியும் விதைத் தொழில் நுட்ப இயலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது ஒரு உயிரோட்டமான பணியாகும்.

விதைத்தொழில் நுட்ப இயலில் காணப்படும் அடிப்படையான ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்க்கலைச் சொற்களை கருவாக்கவும், உருவாக்கவும், திருவாக்கவும் ஆசிரியர் மிகவும் பாடுபட்டுள்ளார் என்பதை இந்நூலைப் படிக்கும் பொழுது உணர முடிகின்றது. தமிழ் மொழியின் ஆற்றலையும் வன்மையையும் கூட இந்நூலைப்படித்துத் தெரிந்து கொள்ளலாம். இந்நூலைச் சிறப்பாக எழுதிய ஆசிரியர் டாக்டர், உ. அஞ்சனம் அழகன் அவர்களுக்கு எனது பாராட்டுதல்கள்.

கோயம்புத்தூர்
31-3-89

**சோ.ஜெயராஜ்**

சு. கணேசபிள்ளை
இயக்குனர்
விதைச்சான்றளிப்புத் துறை

# அணிந்துரை

எண்ணத் தெளிவு, சொல் வன்மை, செயல் திறமை இவைகள் இணைந்து செயல் படுபவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதை காண்கிறோம்,

நம் மனதில் எழும் எண்ணங்கள் யாவும் நம் தாய் மொழியில் அமைவது இயல்பு. வேளாண்மை விஞ்ஞானப் படிப்பு, பணியிலிருப்பவர்களுக்கு குறிப்பாக விதை உற்பத்தி, விதை வணிகம், விதைச்சான்றுத் துறையில் ஈடுபாடுடையவர்களுக்கு இவ்வேளாண்மை கலைச் சொல் கையேடு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

விஞ்ஞான மேற்படிப்பும் தாய் மொழியிலேயே அமையும் கால கட்டம் நெருங்கி வரும் இத்தருணத்தில் டாக்டர், உ. அஞ்சனம் அழகன் அவர்களின் இவ்வெளியீடு பெருமை தருவதாகவும் அமையும்,

விரிவாக்கப் பணி, ஆசிரியர் பணி, விதை உற்பத்திப் பணி, விதை வணிகம், விதைச்சான்று துறை பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இவ்வெளியீடு சிறந்ததொரு தீபச்சுடராக அமையுமென நம்புகிறேன்.

தோட்ட வளர்ப்பியல் துறை அனுபவமும் தமிழ் ஈடுபாடுமுடைய ஆசிரியர் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

கோயம்புத்தூர்
17-3-89

சு. கணேசபிள்ளை

# முன்னுரை

விதைத் தொழில் நுட்ப இயலின் (Seed Technology) அடிப்படையான ஆங்கிலக் கலைச் சொல்லுக்கு ஏற்ற தமிழ் கலைச் சொற்களை இந்நூல் வெளிக்கொண்டு வருகிறது. விதைத் தொழில் நுட்ப இயல் வேளாண்மை இயலின் அடிப்படை இயலாகும், இவ்வியல் தோட்ட வளர்ப்பியல் (Horticulture). கான் இயல் (Forestry) போன்ற உறவு இயல்களின் தாய் இயலாகவும் விளங்குகிறது.

தமிழில் இக்கலைச்சொல் ஆக்க முயற்சி ஒரு புதிய முயற்சியாகும். வேளாண்மை (Agriculture), தோட்ட வளர்ப்பியல் (Horticulture), கான் இயல் (Forestry), பயிரியல் (Botany) சார்ந்த பள்ளி-கல்லூரி மாணவர்கள்—ஆய்வாளர்கள், உழவர்கள், சான்றளிப்பு முகவர்கள் போன்றவர்களுக்குப் பயன்படும் விதத்தில் இவ் அகரவரிசை எழுதப்பட்டுள்ளது.

தமிழ் ஓர் அறிவியல் சார்ந்த மொழி. இதன் மூலம் எத்தகைய அறிவியலையும் நாம் எளிதாகக்கற்றுக்கொள்ளலாம். இதை மேலும் சிறப்பாக்குவதற்கு, போதிய கலைச் சொற்களும், விரிவான நூல்களும் அவசியம். இம்முயற்சியில் ஒரு சிறிய தொடக்கமாக இந்நூல் உருவாகியுள்ளது. நாளுக்கு நாள் மேல்நாட்டு அறிவியல் உலகம் புதிய சொற்களைக் கண்டுபிடித்தும்—உருவாக்கியும் வருகிறது. இத்தகைய ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ் கலைச் சொற்களை தொடர்ச்சியாக கெண்டு வருவதும் அவசியமாகும். இச்செயலுக்கு எல்லை காணமுடியாது.

கலைச்சொற்களை உருவாக்குவதும் நெறிப்படுத்துவதும் மிகவும் கடினமான செயலாகும். இதில் ஏற்பட்ட தொய்வுகளுக்கும், சொத்தைகளுக்கும் நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். வேளாண்மை அறிவியல் தமிழில் ஆலமரமாக படரும்போது இதில் ஏற்பட்ட குறைகளுக்கு தெளிவும், சொல்லில் நுணுக்கமும் ஏற்படும். இதைச் செய்வதற்கு வருங்கால மாணவர்கள் தயாராக உள்ளனர்.

இந்நூலுக்கு அன்புடனும் பரிவுடனும் அணிந்துரை நல்கிய இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழகம், மற்றும்

சர்வதேச நெல் ஆராய்ச்சிக்கழகத்தின் முன்னாள் தலைமை இயக்குனரும் (*Director General*), அனைத்துலக சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கழக தற்போதைய தலைவருமாகிய வேளாண்மை அறிவியல் மேதை பத்மவிபூஷன் உயர்திரு டாக்டர் எம். எஸ் சுவாமிநாதன் அவர்களுக்கு என் பணிவான நன்றியைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர் சோ. ஜெயராஜ் அவர்கள் இந்நூலுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் அணிந்துரை நல்கியுள்ளார்கள். துணைவேந்தர் அவர்களுக்கு என் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலுக்கு மற்றுமொரு அணிந்துரையை தமிழ்நாடு அரசு விதைச் சான்றளிப்புத்துறை இயக்குனர் உயர்திரு எஸ். கணேச பிள்ளை நல்கியுள்ளார்கள். அவர்களுக்கும் என் மேலான பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

இந்நூலை எழுதுங்காலத்தில் உடன் இருந்து செப்பம் செய்து உதவிய அன்பர்கள் டாக்டர் டி. கரிவரதராசன், பேராசிரியர், விதைத் தொழில் நுட்பத்துறை, த. வே. பல்கலைக்கழகம், டாக்டர் பி. அரங்கசாமி, பேராசிரியர், பயறுத்துறை, டாக்டர் எம். இரத்தினசாமி, பேராசிரியர், விதை உற்பத்தித்துறை, டாக்டர் ஆர். ராசகோபாலன், இணைப் பேராசிரியர், பயிரியல் துறை, குமரபெருமாள் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், திருச்சிராப்பள்ளி, டாக்டர் வி. தண்டபாணி, இணைப் பேராசிரியர், பயிர் வினை இயல் துறை, வேளாண்மைக் கல்லூரி, மதுரை, திரு எஸ். சுப்பிரமணியம், இணைப் பேராசிரியர், வேளாண்மை விரிவாக்கத்துறை, வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை, டாக்டர் ஆர். எம். விசுவநாதன், தலைமை ஆசிரியர், இந்து ரெட்டியார் உயர்நிலைப்பள்ளி, பாலையம்பட்டி, அருப்புக்கோட்டை, திரு அ. சவுந்திரபாண்டியன், உதவி இயக்குனர், விதை மையம், கோயம்புத்தூர், திரு தட்சிணாமூர்த்தி, உதவி வேளாண்மை இயக்குனர், விதை சான்றளிப்பு மையம், திருப்பூர், டாக்டர் சோ. சத்தியமூர்த்தி, இணைப் பேராசிரியர், குமரபெருமாள் அறிவியல் நிலையம், திருச்சி, ஆகியோருக்கும் இந்நூலை சிறப்பாக அச்சிட்ட பாரதி அச்சகத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் — உ. அஞ்சனம் அழகன்
26-4-89

# பொருளடக்கம்


| எண். | அதிகாரத் தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | வேளாண்மைக் கலைச் சொற்கள் அகர வரிசை 1 — விதைத் தொழில் நுட்ப இயல் (ஆங்கிலம் - தமிழ்) | 1 – 52 |

# வேளாண்மைக் கலைச்சொல் அகர வரிசை – 1
## விதைத் தொழில் நுட்ப இயல்
## அதிகாரம் - 1

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| **A** | |
| *'a' line* | : 'ஏ' வரிசை |
| *abnormal* | : இயல்பு கடந்த; இயற்கை மீறிய |
| *absorption* | : உறிஞ்சுதல்; உட்கொள்ளுதல் |
| *accelerated ageing* | : விரைவான வயது முதிர்ச்சி |
| *acclimatisation* | : வெப்ப தட்ப நிலை ஒத்தல்; புதிய சூழ்நிலையில் சமாளித்துக்கொள்ளுதல் |
| *accommodation* | : இட உதவி; பொருத்தம்; இணக்கம் |
| *account* | : கணக்கு |
| *acid delinting* | : அமிலம் கொண்டு பஞ்சு இழை நீக்கம் |
| *acid treatment* | : அமிலச் சிகிச்சை |
| *activated clay* | : ஊக்குவிக்கப்பட்ட களிமண் |
| *active ingredient* | : முக்கிய மருந்துப்பொருள்; உள்ளீட்டுப் பொருள் |
| *adaptable area* | : தக அமைவு இடம் |
| *adaptability* | : பொருத்தத்திறன் |
| *adaptation* | : தக அமைவு; பொருத்தம்; ஏற்புடைப்பு |
| *administrator* | : நிர்வாகி |

*admixture* : கலப்பு

*adnate* : மாற்று உறுப்பு ஒட்டி வளர்ந்த

*adsorption* : ஒட்டுந்தன்மை

*advance* : முன்பணம்

*adventitious* : வேற்றிடத்து; பக்கவாட்டில்

*advertisement* : விளம்பரம்

*advise* : ஆலோசனை கூறுதல்

*after ripening* : முற்றியபின் பழுத்தல்; பக்குவமடைதல்; முதிர்வுற்ற

*agarplate method* : கண்ணாடித் தட்டில் கடற்பாசி ஊற்றிச்செய்யும் சோதனை முறை

*ageing* : வயது முதிர்தல்

*agency* : முகமை; முகவமைப்பு

*aggregate fruit* : திரள்கனி; பழக்கொத்து; பழத்தார்

*aggrieved* : பாதிக்கப்பட்ட; குறைபட்ட

*agriculture* : வேளாண்மை

*agronomic characters* : நில மேலாண்மைப் பண்புகள்

*agronomy* : நில மேலாண்மையியல்

*agrostology* : புல் இயல்

*air blower* : காற்று ஊதி; காற்று ஊதும் கருவி; காற்றுத் துருத்தி

*air borne* : காற்றினால் பரவுகின்ற

*akene (achene)* : ஒற்றறைக் காய்வுப் பழம்

*alleged offence* : சாட்டுரைக்கப்பட்ட குற்றச் செயல்

*alkaloid* : கரி, நைட்ரஜன் சார்ந்த மூலக் கூட்டுப்பொருள்; தாவர அடிப்படை மருந்துப்பொருள்

*amendment* : திருத்தம்

*amino acids* : அமினோ அமிலங்கள்

*analysis* : பகுப்பாய்வு; வேதியியல் பகுப்புமுறைகள்

*analyst* : பகுப்பாய்வாளர்; பகுப்பாய்வணர்

*analytical purity* : பகுப்பாய்வுத் தூய்மை; பகுப்பாய்ந்த தூய்மை

*androecium* : மகரந்தத் தாள் தொகுப்பு

*andromonoecious* : இருபால் மற்றும் ஆண்பால் உறுப்புகள் கொண்ட பயிர்

*anemophily* : காற்று மகரந்தச் சேர்க்கை

*annual crop* : ஓராண்டுப் பயிர்

*antagonistic effects* : எதிர்ப்பு விளைவுகள்

*anther* : மகரந்தப்பை

*anthesis* : பூ மலர்ச்சி

*antipetalous* : அல்லிஇதழ் எதிர்புறமான

*apetalous* : அல்லி இதழற்ற

*apiary* : தேனீப்பண்ணை

*appeal* : மேல் முறையீடு; மறு விசாரணை மனு

*appellant* : மறு விசாரணை மனு கோருபவன்

*appendix* : பிற்சேர்க்கை

*appointed date* : குறித்திட்ட நாள்; குறிப்பிடப் பட்ட நாள்

*approved variety* : ஒப்புதல் அளிக்கப்பட்ட விதை வகை; ஒப்பளிப்பு பெற்ற விதை வகை

*arithmetic* : கணிதம்

*article* : உருப்படி

*asexual* : பாலில்லா

*assays* : சோதனைகள்

*assistant director* : உதவி இயக்குனர்

*association* : கூட்டமைப்பு

*atrophy* : வளர்ச்சி இல்லாமை

*audit* : தணிக்கை

*auriculate* : செவி வடிவமான

*autogamy* : தன்னினக் கலப்பு

*automatic sampler* : தானியங்கி மாதிரி எடுக்கும் கருவி

*autonomic* : மகரந்தச்சேர்க்கை இல்லாமல் காய் உருவாகும் தன்மை

*available form* : கிடைக்கும் நிலை; கிட்டும் நிலை

*awn* : உமிச் சிலாம்பு

*axil* : கணுச் சந்து: கணு இடுக்கு

*axillary cob* : கோணக் கதிர்கள்; பக்க வாட்டில் காணப்படும் கதிர்கள்

*azospirillum* : அசோஸ்பைரில்லம் (உயிரி உரம்)

## B

*'b' line* : 'பி' வரிசை

*back cross* : பின் கலவி; பின் தலை முறைக் கலப்பு; பின் கலப்பு

*back cross segregation* : பின் கலவி முறையில் பிரிதல்

*bacteria* : நுண்மம்: பாக்டீரியா

*bag closer* : பை தைப்பான்

*bagger weigher* : பை நிறுக்கும் அளவை

*bark* : பட்டை

*barren* : மலடு

*barren land* : தரிசு நிலம்

*bartering* : பண்டமாற்றுச் செய்கிற

*barrel* : பீப்பாய்

*basal dressing* : அடியுரம்

*basic seed* : அடிப்படை விதை; ஆதார விதை

*basifixed* : அடி ஒட்டிய

*basket* : கூடை

*beak* : பறவையலகு

*bicompound leaf* : இரட்டித்த கூட்டு இலை

*bifoliage* : இரு சிற்றிலை கொண்ட

*bill* : விலைப்பட்டியல்

*bio-chemical procedures* : உயிர் வேதியியல் செயல் முறைகள்

*biological yield* : பொய்ப்பொருள் அறுவடை; உயிர்ப்பொருள் அறுவடை; உயிர் அறுவடை

*biomass* : உயிர்க்கூட்டுப் பொருள்

*bipinnate leaf* : இரட்டித்த சிறகு இலை

*black gram (mung bean)* : உளுந்து

*black spot (disease)* : கரும்புள்ளி நோய்

*bleached seed* : வெளிறிய விதை

*blocking* : தடுத்தல்

*blonded seed* : நிறங்கள் தொற்றிய விதை

*blower* : காற்றுத் துருத்தி

*body, corporate* : கூட்டுரு குழுமம்

*borner divider* : போர்னர் விதை பகுக்கும் கருவி

*bottle* : புட்டி, போத்தல்

*boll* : காய்

*bound* : உள்ளுள்ள; தயாராகவுள்ள

*bract* : பூவடிச் சிதல்

*bracteole* : பூக்காம்புச் சிதல்; புற இதழ்

*bran* : தவிடு (உமி)

*breadth* : அகலம்

*breeder's seed* : பயிர்ச் சேய்ப் பெருக்காளரின் விதை; மரபியல் வல்லுநரின் விதை

*breeder's rights* : பயிர்ச் சேய்ப் பெருக்காளரின் உரிமைகள்

*breeding* : பயிர்ச் சேய்ப் பெருக்கம்; பயிர் சிறப்பிப்பு

*broadbean (faba bean)* : வாள் அவரை

*broken seeds* : உடைந்த விதைகள்

*bud mutation (bud sport)* : மொட்டுச் சடுதி மாற்றம்

*buff colour* : வெளிர் மஞ்சள் நிறம்

*bulb* : பூண்டு; குமிழ்த்துண்டு; குமிழ்த்தண்டு

*bulk* : பெரும் பகுதி

*buyer* : விலைக்கு வாங்குபவர்

*bye-law (by-law)* : துணை விதி

# C

| | | |
|---|---|---|
| 'c' line | | 'சி' வரிசை |
| calyx | : | புல்லி வட்டம் |
| can | : | செம்பு, குவளை |
| canopy orientation | : | பயிர்ப்படர்வு |
| capsule | : | கனி அறை |
| carbon | : | கரி |
| carpel | : | சூலிலை |
| caryopsis | : | புல்வகைத் தானியம் |
| case | : | உறைக்கட்டு |
| catalogue | : | பட்டியல் |
| cattle fodder | : | கால்நடைத் தீவனம் |
| central | ; | மைய; நடு |
| central seed committee | : | மைய விதைக் குழு |
| central seed laboratory | : | மைய விதை ஆய்வகம் |
| centric | : | உருண்ட |
| centrifugal divider | : | சுற்றிப்பிரிக்கும் கருவி |
| cereals | : | தானியப் பயிர்கள் |
| certified seed | : | சான்றளிக்கப்பட்ட விதைகள் |
| certification | : | சான்றளிப்பு முறை; சாத்தளிப்பு முறை |
| certification agency | : | சான்றளிப்பு முகமை |
| certification sample | : | சான்றளிப்பு மாதிரி |

*chaff* : பதர்; சாவி

*chalaza* : சூலடி

*chamagamy* : மலர் திறந்த பின்னால் உருவாகும் மகரந்தச் சேர்க்கை

*characteristic* : பண்பியல்பு

*chemical dormancy* : இரசாயன விதைத் தூக்கம்

*chemotropism* : வேதி நாட்டம்

*cheque* : காசோலை

*chilling* : குளிர்ச்சி

*chilling stress* : குளிர்ச்சி அழுத்தம்

*chimaera* : கதம்ப உரு

*chlorophyll* : பச்சையம்

*chlorosis* : பசுமைச் சோகை

*cholam* : சோளம்

*circumference* : சுற்றளவு

*cladophyll* : தண்டு போன்ற இலை

*clarification* : தெளிவுபடுத்துதல்

*class designation* : வகுப்புப் பட்டம்

*cleistogamy* : மலராத தன்மகரந்தச் சேர்க்கை

*climber* : ஏறுகொடி

*clone* : பயிர்ப்பாக வழிக்கன்றுச் செடி

*coarse* : முரடான

*code* : சட்டத்தொகுப்பு

*colour* : நிறம்

*collectively* : மொத்தமாக

*colonisation of the fungus* : வளர்ச்சி பெற்ற பூசண இழைகளின் கூட்டம்

*commercial seed* : வணிக நோக்கு விதைகள்

*committee* : குழு

*common name* : பொதுப்பெயர்

*company* : நிறுமம்; நிறுவனம்

*compatability* : ஒவ்வும் தன்மை

*compatible crop species* : பாதகம் இல்லாமல் இணைந்து வளரும் பயிர்கள்

*complainant* : குறையீட்டாளர்

*composite sample* : தொகுப்பு மாதிரி

*composition* : தொகுப்புரை; கட்டுரை

*compound leaf* : கூட்டு இலை

*concentration* : செறிவு

*concept* : தத்துவம்

*conductivity test* : கடத்தும் சோதனை

*cone* : கூம்பு; காய்

*conform* : ஏற்ப

*conidia* : பூஞ்சாள வித்துக்கள்

| | | |
|---|---|---|
| *connivance* | : | மறைமுக இணக்கம் |
| *consignee* | : | சரக்குப் பெறுநர் |
| *constriction* | : | ஒட்டும் தன்மை |
| *consumer* | : | நுகர்வோர் |
| *contaminated sample* | : | நோய்க் காரணி ஊடுருவிய பொருள்; கலப்படப்பொருள் மாதிரி |
| *contempt* | : | அலட்சியம்; கேவலம்; இகழ்ச்சி; அவமதிப்பு; |
| *corn* | : | தானியம் |
| *corolla* | : | அல்லி வட்டம் |
| *correlation* | : | ஒன்றுக்கொன்று சம்பந்தம்; ஒன்றுக்கொன்று காணும் பொருத்தம் |
| *cost benefit ratio* | : | வரவு செலவு விகிதம் |
| *cotton* | : | பஞ்சு; பருத்தி; பருத்தித் துணி |
| *coulure* | : | பூக்களில் காய் பிடிக்காத நிலை |
| *cowpea* | : | தட்டைப்பயறு; காராமணி |
| *criminal* | ; | குற்றவாளி |
| *crinkle* | : | சுருங்கிய |
| *crop* | : | பயிர்; விளைவு; விளைச்சல் |
| *crop combination* | : | பயிர்க் கூட்டு |
| *crop improvement Association* | : | பயிர் மேம்பாட்டுச் சங்கம் |

*crop intensity* : பயிர் அடர்த்தி

*cropping pattern* : பயிர் முறைத்திட்டம்; பயிர் மாதிரித் திட்டம்; பயிர் வடிவமைப்பு

*cropping system* : பயிர் அமைப்புத்திட்டம்; பயிர்த்திட்டம்

*cross fertilization* : அயல் கருவுறுதல்

*cross incompatibility* : குறுக்கு ஒவ்வாமை; கலப்பு ஒவ்வாமை

*cross-pollination* : அயல் மகரந்தச் சேர்க்கை

*cruciferous vegetable* : முட்டைக்கோசு இனக் காய்கறிகள்

*cultivar* : வகை

*cultural practices* : வளர்ப்பு முறைகள்; உழவியல் செயல்முறைகள்

*cumbu* : கம்புப்பயிர்

*cumulative production* : மொத்த உற்பத்தி; திரள் உற்பத்தி

*curve* : வளைவு

*cuttings* : தண்டுத் துண்டுகள்; தாவரத் துண்டுகள்

*cytosterile* : திசுவறை மலட்டுத் தன்மை

## D

*'d' line* : 'டி' வரிசை

*daily allowance* : நாட்படி

| | | |
|---|---|---|
| *damping-off (disease)* | : | நாற்றழுகல் நோய் |
| *dead seeds* | : | உயிர் அற்ற விதைகள்; உயிர் இல்லாத விதைகள் |
| *de-awning* | : | விதைமுள் நீக்குதல்; உமிச்சிலாம்பு நீக்குதல் |
| *deciduous* | : | முதிர்ந்த பின் உதிரும் |
| *defect* | : | குறை |
| *degree* | : | தரம்; பாகை; வெப்ப அளவு |
| *dehiscence* | : | வெடிக்கும் |
| *dehulling* | : | தோல் நீக்கம் |
| *dehumidifier* | : | ஈரப்பசை நீக்கும் கருவி; ஈரப்பசை நீக்கி |
| *deionised water* | : | அயனி நீக்கப்பட்ட தண்ணீர் |
| *delegate* | : | பிரதிநிதி |
| *delint* | : | விதையிலிருந்து பஞ்சை நீக்குதல் |
| *deliver* | : | சேர்த்தல் |
| *denser seed coat* | : | அடர்த்தியான விதையுறை |
| *density* | : | அடர்த்தி; திணிவு |
| *depot* | : | கிடங்கு |
| *derivative* | : | மூலத்திலிருந்து பெற்றது |
| *derogatory* | : | கண்ணியத்தைக் குறைக்கும் |
| *detasseling* | : | ஆண் பூ நீக்கம்; ஆண் கதிர் நீக்கம் |

| | | |
|---|---|---|
| *deterioration* | : | தரம் கெடுதல்; சீரழிதல் |
| *developmental variation* | : | புதிதாக ஏற்படும் மாற்றங்கள் |
| *dhal* | : | பருப்பு |
| *diaphanoscope* | : | ஒளி அளவு மானி |
| *dichogamy* | : | முன் பின் பக்குவம் அடைதல் |
| *dicotyledon* | ; | இரட்டை விதையிலைத் தாவரம் |
| *dicriny* | : | ஒருபால் நிலை |
| *differentially affected* | : | வேறுபட்ட சேதமடைதல் |
| *dimorphic* | : | இரு உருவான் |
| *dioecious* | : | ஆண் பெண் பூக்கள் தனித் தனியாகக் காணப்படும் நிலை |
| *dip* | : | தோய் |
| *diploid* | : | இரு நிறத்திரியுடையன |
| *director* | : | இயக்குநர் |
| *discoloured seed* | : | நிறம் மாறிய விதை |
| *dispersal of seed* | : | விதை பரவும் முறை |
| *disposal* | : | தீர்வு செய்தல் |
| *dissemination* | : | பரவுதல் |
| *dissolve* | : | கலை; கரை |
| *distinct differences* | : | தெளிவான வேற்றுமைகள் |
| *distinguish* | : | மாறுபாடு காணுதல் |

*document* : பத்திரம்

*domestication* : பேணி வளர்த்தல்

*dominant character* : ஆளுமைப் பண்பு

*dormancy* : தூக்க நிலை; உறக்க நிலை; ஓய்வு நிலை

*dorsal* : மேற்புற

*dose* : அளவு

*drench* : சொட்டச்சொட்ட நனை

*drug store beetle* : சேமிப்பு மருந்து வண்டு

*dryland* : புன்செய் நிலம்

*dry* : உலர்ந்த

*dry matter accumulation (DMA)* : காய்வுப் பொருள் சேர்க்கை

*dry weight* : காய்வு எடை

*due* : கொடுபட வேண்டிய தொகை

*due deligence* : மனத்திட்பம்

*duty* : கடமை; வரி

*dwarf* : குள்ளமான

## E

*each* : ஒவ்வொரு

*earliness* : குறைந்த வயதுத் தன்மை

*ears* : தானியக் கதிர்கள்

*ecology* : சூழ்நிலையியல்

*economic yield* : மெய்ப்பொருள் அறுவடை; லாபகரமான அறுவடை

*edge* : ஓரம்

*edible oil* : உண்ணக்கூடிய எண்ணெய்

*efficiency* : செயல் திறன்

*electronic seed counter* : மின் அணு விதை எண்ணும் கருவி

*electron scanner photo-micrograph* : மின் அணு ஆய்வு நுண் நிழற் படம்

*eject* : வெளித்தள்ளு

*emasculated flowers* : ஆண் தன்மை நீக்கிய பூக்கள்

*emasculation* : ஆண்பாகம் நீக்குதல்

*embryo* : விதைக்கரு; வித்து

*embryo dormancy* : விதைக்கரு தூக்கம்

*embryogenic* : கரு உருவாகும் நிலை

*embryo sac* : கருப்பை

*emerging seedlings* : முளைத்தெழும் நாற்றுகள்

*employment potential* : வேலைவாய்ப்பு சக்தி

*empty floret* : வெறுமையான மலர்ப்பிரிவு

*empty flowers* : வெறுமையான மலர்கள்

*enact* : சட்டமாக இயற்று

| | | |
|---|---|---|
| *encircle* | : | சூழ்ந்துகொள் |
| *endocarp* | : | கனியின் உள்ளுறை |
| *endogenous levels* | : | அக உற்பத்தி அளவுகள் |
| *endorse* | : | அமுலாக்கு |
| *endosperm* | : | விதை சூழ் தசை |
| *engineer* | : | பொறியர் |
| *enroll* | : | பதிவு செய் |
| *entire* | : | முழு |
| *environment* | : | சூழ்நிலை |
| *enzymes* | : | நொதிகள் |
| *epicarp* | : | வெளியுறை |
| *epicotyl* | : | வித்திலை மேல் தண்டு |
| *epidemics* | : | பெரும் அளவில் நோய் தொற்றுதல் |
| *epidemiology* | : | சூழ்நிலை இணைந்த ஆய்வு |
| *epidermis* | : | புறத்தோல் |
| *equal* | : | இணையான; சமமான |
| *eradication* | : | பூண்டோடு அழித்தல் |
| *erupt* | : | வெளித்தள்ளு |
| *established* | : | நிறுவப்பட்ட; நிறுவு |
| *estimation* | : | கணக்கீடு |
| *evaluation* | : | மதிப்பீடு |

*excised* : பிரிக்கப்பட்ட

*exhaust* : காலி செய்யும்

*exocarp* : கனியின் வெளியுறை

*exine* ; மகரந்தத்தின் வெளியுறை

*experiment* : சோதனை; ஆராய்ச்சி

*expiry of validity period* : சட்டப்படி செல்லக்கூடிய காலக்கெடு (காலத்தின்முடிவு)

*exploitation* : பயன்படுத்திக் கொள்ளுதல்

## F

$f_1$ : முதற்தலைமுறைக் கலப்பி

*fabric* : துணி

*faithful* : நம்பகமான

*fallow land* : கரம்பை நிலம்

*false fruit* : பொய்கனி

*family* : குடும்பம்

*fasten* : இறுகக்கட்டு; ஒட்டு; இணை

*fatty acids* : கொழுப்பு அமிலங்கள்

*fern* : பெரணி

*fertilization* : கருவுறுதல்

*fertilizer* : செயற்கை உரம்

*field* : நிலம்; வயல்

*field capacity* : மண்ணின் மேல்மட்ட நீர் கொள்ளளவுத் திறன்

*field inspection* : பண்ணைச் சோதனை; வயல் கண்காணிப்பு

*field sanitation* : பண்ணைச் சுகாதாரம்; வயல் சுகாதாரம்

*fig moth* : அத்திப்பட்டான்

*film* : சவ்வு; படம் பிடிக்கும் தகடு

*filter paper* : வடிகட்டும் தாள்

*filled seed* : முழுவிதை

*final inspection* : கடைசிச் சோதனை

*fine* : அபராதம்; மென்மையான

*firm* : வணிக நிறுவனம்; உறுதியான

*flag leaf* : கண்ணாடி இலை

*flask* : குடுவை

*flat storage* : பைகளில் சேமிக்கும் முறை

*fleshy* : சதைப்பற்றுள்ள; கொழுத்த

*florets* : மலர்ப் பிரிவு

*fluctuation* : ஏறி இறங்குதல்

*fodder* : தீவனம்

*foliage* : இலைகள்; தழை

*forage crops* : தீவனப் பயிர்கள்

*forage legumes* : தீவனப் பயறுப் பயிர்கள்

*forecasting losses* : இழப்புகளை முன் அறிவித்தல்

| | | |
|---|---|---|
| *foreign seeds* | : | அயல் விதைகள் |
| *forfeiture* | : | பறிவினை |
| *foundation seed* | : | அடிப்படை விதைகள்; ஆதார விதைகள் |
| *french bean (dry bean or field bean)* | : | பிரஞ்சு அவரை; பீன்சு-அவரை |
| *fruit* | : | கனி; பழம் |
| *full floret* | : | முழு மலர்ப் பிரிவு |
| *funnel* | : | புனல்; புகைபோக்கி |
| *furnish evidence* | : | சான்றளி |

## G

| | | |
|---|---|---|
| *gamma - rays* | : | காமாக் கதிர்கள் |
| *garden* | : | தோட்டம் |
| *gauge* | : | அளவு; அளவை |
| *gene* | : | பண்பகம்; மரபகம் |
| *generation* | : | தலைமுறை |
| *genetic purity* | : | மரபுத் தூய்மை |
| *genetics* | : | மரபியல்; கால் வழியியல் |
| *genotype* | : | பண்பு விதம் |
| *genus* | : | பண்புக்குழு |
| *geology* | : | புவி அமைப்பு இயல் |
| *geotropism* | : | புவிநாட்டம் |
| *germ* | : | முளை; மொட்டு |

*germination* : முளைப்பு: முளைவிடுதல்

*germination capacity* : முளைப்புத்திறன்

*germination inhibitors* : முளைப்புத்தடுப்பான்கள்

*germination paper* : விதைகளை முளைக்க-
வைப்பதற்குரிய தாள்

*germination percentage* : முளைப்புச் சதவிகிதம்

*germination rate* : முளைப்பு விகிதம்

*germination tray* : விதைகளை முளைக்க-
வைக்கப் பயன்படுத்தும் தட்டு

*germplasm* : பண்பகப் பண்ணை

*germpore* : வளர்துளை

*ginning percentage* : அரவைச் சதவிகிதம்

*girth* : சுற்றளவு

*glass house* : கண்ணாடி மனை

*glove* : கையுறை

*glue* : பிசின்

*good faith* : நன்னம்பிக்கை

*good will* : நல்லெண்ணம்

*gown* : மகளிரின் மேல் சட்டை;
பிரத்தியோக மேலங்கி

*grading* : தரம் பிரித்தல்

*graft* : ஒட்டுச்செடி
(தோட்டவளர்ப்பியல்)

*grain* : தானியம்

*grain drier* : தானிய உலர்த்தி

*grain yield* : தானிய மகசூல்

*gram (chick pea or bengalgram)* : கொண்டைக் கடலை

*granary* : களஞ்சியம்

*granules* : குருணைகள்

*graph* : வரைபடம்

*grass* : புல்

*grass pea (chickling vetch)* : கேசரிப்பருப்பு

*gravitation* : புவி ஈர்ப்பு

*green gram (mung bean)* : பாசிப் பயறு; பச்சைப்பயறு

*green house* : பசுமையகம்

*green revolution* : பசுமைப் புரட்சி

*grind* : மாவாக்கு; அரை

*ground floor* : அடித்தளம்

*growers of seed* : விதை உற்பத்தியாளர்கள்

*growing degree day (gdd)* : நாள் வளர்ச்சி அளவு

*growth* : வளர்ச்சி

*growth efficiency* : வளர்ச்சித் திறன்

*growth inhibitors* : வளர்ச்சித் தடுப்பான்கள்

*growth promotors* : வளர்ச்சி ஊக்கிகள்; வளர்ச்சி பெருக்குவான்கள்

*growth regulators* : வளர்ச்சி நிர்ணயிக்கும் பொருட்கள்

*growth retardants* : வளர்ச்சி குறைப்பான்கள்

*growth rate* : வளர்ச்சி விகிதம்

*guarantee* : உத்திரவாதம்

*gunny* : சாக்கு

*gynoecium* : சூலகம்

## H

*habit* : வளர் இயல்பு; வழக்கம்

*hairy* : முடியுடன் கூடிய

*hard seed* : கெட்டி விதை; கடின விதை

*harvest* : அறுவடை

*hay* : காய்ந்த புல்; உலர்ந்த புல்; வைக்கோல்

*heading stage* : பூட்டைப் பருவம்

*heavy seeds* : கனமான விதைகள்; பழுவான விதைகள்

*heredity* : மரபு

*heritable variation* : மரபுக்குக்கொண்டு செல்லப்படும் மாற்றங்கள்

*herbicide* : களைக்கொல்லி

*hermaphrodite* : இருபால் உயிர்; இருபாலி

*hermatically sealed containers* : காற்றுப்புகாமல் அடைக்கப்பட்ட கொள்கலன்

*heterogenous* : பலவகையான

| | | |
|---|---|---|
| *heterostyly* | : | இருமட்டசூல் தண்டு |
| *heterosis* | : | கலப்பு எழுச்சி (வீரியம்) |
| *high quality seed* | : | உயர்தரமான விதை;<br>மேலான தரமிக்க விதை |
| *hilum* | : | வித்துத் தழும்பு |
| *holder of certification* | : | சான்றைப் பெற்றவர் |
| *homogenous* | : | ஒரே சீராயுள்ள |
| *hormonal balance* | : | வளர்ச்சிப் பொருட்களின்<br>சமரியம் |
| *hind* | : | பின்புறமுள்ள |
| *horsegram* | : | கொள்ளு; காணம் |
| *horticulture* | : | தோட்ட வளர்ப்பியல்;<br>தோட்டப்பயிர்த்தொழில் |
| *host* | : | ஊணூட்டி |
| *host restriction* | : | ஊணூட்டியின் கட்டுப்படுத்–<br>தும் தன்மை |
| *hot water treatment* | : | வெப்பநீர் சிகிச்சை |
| *humidity* | : | வானீரப் பசை |
| *husk* | : | உமி; புறத்தோல்; ஓடு |
| *hyacinth bean* | : | அவரை |
| *hybrid vigour* | : | கலப்பு எழுச்சி |
| *hybrid* | : | கலப்பி |
| *hybridization* | : | பண்பகக் கலப்பு |
| *hybrid seed* | : | கலப்பு எழுச்சி விதை;<br>கலப்பி விதை |
| *hydrolysis* | : | நீர்ப்பகுப்பு |

*hydrophyte* : நீர்வாழ் தாவரம்

*hygroscopic* : நீர் ஈர்க்கும்

*hyphae* : பூசண இழைகள்

*hypocotyl* : வித்திலை கீழ்த்தண்டு

*hypothesis* : அனுமானம்; எடுகோள்

*hypotrophy* : வளர்ச்சி குன்றுதல்

*identical* : ஒரே மாதிரியான

*identifiable* : இனங்கண்டுகொள்ளத்தக்க

*identification* : அடையாளப்படுத்துதல்

*idiotype* : நற்குணங்கள் கொண்ட முன்மாதிரிப் பயிர் விதம்

*ill filled seed* : பதர்

*imbibition* : உட்கொள்ளுதல்; பருகுதல்

*immature seed* : முதிராத விதை

*imperfect* : முழுமையற்ற

*impermeability* : ஊடுருவாத் தன்மை

*improved strains* : திருந்திய வகைகள்; பொறுக்கு வகைகள்

*impure* : தூய்மையற்ற

*incompatibility* : ஒவ்வாமை; ஒவ்வாத்தன்மை

*incomplete* : முற்றுப்பெறாத

*incubation test* : உள்வளர்ச் சோதனை

*indehiscent* : வெடிக்காத

*indian penal code* : இந்தியக் குற்றச் சட்டம்

*indicator host* : முன்னறிவிப்பு ஊணூட்டி

*indigenous* : தன் நாட்டில் தோன்றிய; உள் நாட்டுக்குரிய

*indirect effects* : மறைமுக விளைவுகள்

*individual* : தனி நபர்

*individually* : தனித் தனியாக

*indoor farming system* : வீட்டுப் பண்ணைத் திட்டம்

*induced mutation* : தூண்டப்பட்ட திடீர் மாற்றம்

*induced splitting* : தூண்டப்பட்ட வெடிப்பு

*inert matter* : உயிர்ப்பற்ற பொருள்

*inflorescence* : மலர்க்கொத்து; மஞ்சரி

*influence* : செல்வாக்கு; ஆதிக்கம்

*inhibitory substances* : தடுப்புப் பொருட்கள்

*initial* : ஆரம்ப

*inoculation* : புகுத்துதல்

*inoculum* : நோய்க் காரணிப் பொருள்

*insect damage* : பூச்சிச் சேதம்

*inseparable* : பிரிக்க முடியாத

*inspector* : ஆய்வாளர்

*input* : இடுபொருள்

*intensive cultivation* : தீவிரச் சாகுபடி

*interagency certification* : இரு முகமைச் சான்றளிப்பு

*intercrop* : ஊடுபயிர்

*interest* : வட்டி

*international seed testing association* : அனைத்துலக விதைச்-சோதனைக் கழகம்

*internode* : கணு இடைவெளி

*intergeneric* : பண்புக் குழுக்களுக்கிடை

*interpetiole* : இலைக் காம்பிடை

*inter space* : இடைவெளி

*interspecific* : தனிகங்களுக்கிடை

*in the event of* : நிகழ்ச்சியில்

*intine* : உள்ளுறை

*inversely* : தலைகீழான

*investigation* : தேர்ந்து ஆராய்தல்

*invoice* : விலைப்பட்டியல்

*irrigated crop* : இறைவைப் பயிர்

*isolation* : தனிப்படுத்தல்; பிரித்தல்; தனிமைப்படுத்துதல்

*isolation distance* : தடுப்பு இடைவெளி

*irradiated seed* : கதிர்வீச்சுக்குட்படுத்தப்பட்ட விதை

## K

| | | |
|---|---|---|
| *kernel* | : | கொட்டை; பருப்பு |
| *kind* | : | விதம் |
| *kit box* | : | உபகரணப்பெட்டி; துணைக்கருவிப் பெட்டி |

## L

| | | |
|---|---|---|
| *label* | : | அடையாள அட்டை; அடையாளச்சீட்டு; பெயர்ச்சீட்டு |
| *labelled sead* | : | அடையாளப்படுத்தப்பட்ட விதை |
| *labellum* | : | உதடு |
| *labiate* | : | உதடு போன்ற |
| *laboratory* | : | ஆய்வுக் கூடம் |
| *laboratory tests* | : | ஆய்வுக் கூடச் சோதனைகள் |
| *lamina* | : | தாள் |
| *lanceolate* | : | ஈட்டி வடிவான |
| *land use efficiency* | : | நிலத்தைப் பயன்படுத்தும் திறன் |
| *lanky* | : | உயர்ந்து மெலிந்த |
| *latitude* | : | கிடைக்கோடு; அகலம் |
| *layer* | : | பதியம்; பதியன் |
| *lay-out* | : | திட்டப்; அமைப்பு |

| | | |
|---|---|---|
| *leachate* | : | விதைகளை மூழ்க வைத்த பின் கிடைத்த கலவை நீர் |
| *leaching* | : | உள் இழுக்கப்படுதல் |
| *leaf area index (lai)* | : | இலைப் பரப்புக் குறியீடு |
| *leaflet* | : | சிற்றிலை; துண்டுப்பிரசுரம் |
| *legal proceedings* | : | சட்டமுறைப்படியான நடவடிக்கை |
| *legumes* | : | பயறு வகைப் பயிர்கள் |
| *lemma* | : | செதிற்பூ |
| *light sensivity* | : | ஒளி உணர்ச்சி |
| *live seeds* | : | உயிருள்ள விதைகள் |
| *localisation* | : | குறிப்பிட்ட பகுதியில் மட்டும் தோற்றிய நிலை |
| *locality* | : | இடம்; சுற்றுப்புறம் |
| *locule* | : | சூலக அறை |
| *long-day plant* | : | நீண்ட கால ஒளி அளவு விரும்பும் பயிர் |
| *long duration* | : | நீண்டகால; நீண்ட வயது |
| *longevity* | : | நெடு நாளைய வாழ்வு |
| *longitude* | : | குத்துக்கோடு |
| *lot number* | : | குவியல் எண்; பங்கு எண் |
| *low energy* | : | குறைவான ஆற்றல் |

## M

| | | |
|---|---|---|
| *magistrate* | : | குற்றவியல் நீதிபதி |

| | | |
|---|---|---|
| *magnetic accounting computer* | : | காந்தக்கணக்குப் பொறி |
| *maize (zea)* | : | மக்காச் சோளம்; மொக்கைச் சோளம் |
| *male female line ratio* | : | ஆண் பெண் வரிசை விகிதம் |
| *male sterile line ratio* | : | ஆண் மலட்டுத்தன்மை வரிசை விகிதம் |
| *male sterility* | : | ஆண் மலட்டுத் தன்மை |
| *man days* | : | மனித நாட்கள் |
| *manure* | : | எரு |
| *mark* | : | குறி; அடையாளம் |
| *mass emasculation* | : | பெருமளவு ஆணகச் சிதைப்பு |
| *mass selection* | : | பெருமளவுத் தேர்வு |
| *material object* | : | சான்றுப் பொருள் |
| *mature seed* | : | முதிர்ந்த விதை |
| *maximum production* | : | உச்ச அளவு உற்பத்தி |
| *mean* | : | நடுநிலையான; சராசரியான |
| *mechanization* | : | இயந்திரமயமாக்குதல் |
| *mediated* | : | மருந்தூட்டப்பட்ட |
| *medium duration* | : | நடுத்தர வயது |
| *memorandum* | : | நினைவுக் குறிப்பு; மகசர் |
| *mercurial fungicides* | : | பாதரசப் பூசணக் கொல்லிகள் |
| *mesocarp* | : | கனி நடுத்தோல் |

*mesophyll* : இலை இடைத்திசு

*mesophyte* : வளர்நிலைத் தாவரம்

*metabolism* : வளர்சிதை மாற்றம்

*micronutrient* : நுண்ணூட்டச்சத்து

*misrepresentation* ; திரித்துக்கூறுதல்

*method* : முறை; வகை

*mixed cropping* : கலப்புப் பண்ணை; கலப்புப்-பயிர்முறை

*mixture* : கலவை

*moisture content* : உள்ளடங்கிய ஈரம்; ஈரப்பதம்

*monitoring* : மேற்பார்வையிடுதல்

*monocotyledonous* : ஒரு விதையிலை உள்ள

*monocropping* : ஒரு பயிர் சாகுபடி முறை

*monopetalous* : அல்லி இணைந்த

*morality* : நீதி நெறி; நல்லொழுக்கம்

*morphology* : புற அமைப்பியல்; இயற்கை உருவம்

*moth bean* : கல்பயறு: நரிப்பயறு

*mucilaginous layer* : வழவழப்பான அடுக்கு

*multiple cropping* : பலபயிர் சாகுபடிமுறை

*multiple floret* : அடுக்கு மலர்ப் பிரிவு

*multiple fruit* ; இணை கூட்டுக் கனி

*multistoreyed cropping* ; பல அடுக்குச் சாகுபடித் திட்டம்

*mutation* : திடீர் மாற்றம்; சடுதி மாற்றம்

*mycelial growth* : பூசண இழை வளர்ச்சி

## N

*national commission on agriculture* ; தேசிய வேளாண்மைக் குழு

*national seed corporation* : தேசிய விதை வாரியம்

*natural crossing* : இயற்கைக் கலப்பு

*neck rot* : தொண்டை அழுகல் (நோய்)

*negative correlation* : எதிரிடையான சம்பந்தம்

*negative relation* : எதிரிடையான உறவு

*nitrogen* : தழைச்சத்து

*node* : கணு

*non destructive means* : அழிவில்லாத முறை

*non discoloured seed* : நிறமாற்றமில்லாத விதை

*non dormant* : தூக்கநிலையில்லாத

*non monetary inputs* : இலாபம் தராத இடு-பொருட்கள்

*non sterilised seed* : நுண்ணுயிர் நீக்கப்படாத விதை

*normal seedling* : சாதாரணமான நாற்றுகள்

*notification* : அறிவிப்பு; விளம்பரம்; அறிவித்தல்

*notified variety* : அறிவிக்கப்பட்ட வகை

*nozzle* : தெளிமுனை

*nucleus seed* : கருவிதை

*nursery* : நாற்றங்கால்

*nut* : கொட்டை

*nutrition* : ஊட்டச்சத்து; ஊட்டம்

*oblique* : சாய்ந்த

*oblong* : நீள்சதுர

*observation plot* : கூராய்வுப்பாத்தி

*offering to sell* : விற்க முனைகின்ற

*official control* : அலுவலகக் கட்டுப்பாடு

*officially* : அலுவல்முறையில்

*offspring* : சேய்; கன்று

*off type* : பிறழ்ந்த வகைகள்; மாறுபட்ட வகைகள்

*oil palm* : எண்ணெய்ப் பனை

*oil seed crops* : எண்ணெய் வித்துப் பயிர்கள்

*one way incompatability* : ஒரு வழி ஒவ்வாமை

*oospores* : பூசண வித்துக்கள்

*opaque* : தெளிவில்லாத; தெரியாத

*osmosir* : சவ்வூடு பரவல்

*other crop seed* : வேற்றுப் பயிர் விதை

*outbreak* : திடீரெனத்தோன்றல்; எழுதல்

*out cross* : வெளிக்கலப்பு

*ovary* : சூல்பை

*ovate* : முட்டை வடிவமான

*over coming* : தடுத்தல்

*ovule* : சூல்

*ovum* : முட்டை; அண்டம்

**P**

*paddy* : நெல்

*paddy borer beetle* : நெல் துளைக்கும் வண்டு

*paddy thresher* : நெற்கதிரடிக்கும் இயந்திரம்

*paddy winnower* : நெற் தூற்றும் இயந்திரம்

*palisade cells* : வேலிக்கால் திசுவறைகள்

*panicle* : பூங்கொத்து

*parameter* : கருத்தை நிலைநாட்டும் அளவுப்பண்புகள்

*parchment* : எழுதும் தோல்; பழந்தாள்

*parental material* : மூதாதை வித்துக்கள்

*parthenocarpy* : கருச்சேர்க்கை நடை பெறாமல் கனி உருவாகும் தன்மை

*particulars* : விவரங்கள்

*partitioning* : பிரித்தல்

*partner* : கூட்டாளி

*pathogenicity tests* : நோயுற்பத்திச் சோதனைகள்

*pea (field pea or dry pea)* : பட்டாணி

*peak* : உச்சகட்ட

*pedicel* : பூக்காம்பு; பூங்காம்பு

*peduncle* : பூங்கொத்துத் தண்டு; மஞ்சரித்தண்டு

*penetration* : துளைப்பு

*percent germination* : முளைப்புச் சதவிகிதம்

*perennial* : பல்பருவச் செடி; பல்லாண்டுச்செடி

*perennial pasture* : பல்லாண்டு மேய்ச்சல் நிலங்கள்

*perianth* : இதழ்கள்

*pericarp* : கனித்தோல்; மேல் தோல் பகுதி

*perigynous* : சூலகத்தைச் சுற்றி அமைந்த

*period* : காலம்; பருவம்; காலப்பகுதி

*permeable* : உட்புகு

*person* : ஒரு நபர்; ஒரு ஆள்

*pests of stored products* : சேமிப்புத் தானியங்களைத் தாக்கும் பூச்சிகள்

*petridish* : சிறு கண்ணாடித் தட்டுகள்

*ph* : காரகாடி நிலை

*phenotype* : தோற்ற விதம்

*phosphoric acid* : மணிச் சத்து; பாஸ்பாரிக் அமிலம்

*photo period* : ஒளிக் கால அளவு

*photosynthesis* : ஒளிச்சேர்க்கை

*photosynthetically active radiation (PAR)* : ஒளிச் சேர்க்கையால் இயங்கும் ஒளிவீச்சு

*photosynthetic rate (pr)* : ஒளிச்சேர்க்கை அளவு விகிதம்

*photothermal requirement* : வெளிச்ச வெப்பத் தேவைகள்

*photothermal unit (ptu)* : வெளிச்ச வெப்ப அலகு

*phyllody* : காம்பிலை

*physical dormancy* : வெளிப்படை விதைத் தூக்கம்

*physical maturity* : முதிர்ச்சி

*physical purity* : இயற்கையானத் தூய்மை

*physiological bases* : வினையியல் அடிப்படைகள்

*physiological characters* : வினையியல் சார்ந்த பண்புகள்

*phytosanitary* : தாவர நலம்; தாவரச்சுத்தம்

*pick* : பொறுக்குதல்

*pigeonpea (red gram)* : துவரை

*pinnate leaf* : இறகு வடிவ இலை

*pistil* : சூலகம்

*placenta* : சூல் ஒட்டு

*plant breeding* : பயிர் சிறப்பிப்பு; பயிர்ச்சேய்ப்பெருக்கம்

*plant quarantine* : செடிகளைத் தனிமைப் படுத்துதல்

*plant variety protection* : பயிர் வகைப் பாதுகாப்பு

*plumule* : விதைமுளைத் தண்டு

*pod* : காய்

*pollen grain* : பூந்துமணி; மகரந்தம்

*polymorphic* : பலவடிவுள்ள

*poor quality* : தரக்குறைவு

*population* : பயிர்த் தொகை

*positive association* : நேரிடையான இணைப்பு

*positive correlation* : நேரிடையான சம்பந்தம்

*post emergence rot* : பின் முளைப்பு அழுகல் (நோய்)

*potassium* : சாம்பல் சத்து; பொட்டாசியம்

*potential viability* : மறைந்துள்ள முளைப்புத் திறன்

*pre–emergence rot* : விதை அழுகல் (நோய்)

*pre–germination activity* : விதை முளைப்புக்கு முன் உள்ள வினைகள்

*pre-harvest sprouting* : அறுவடை முன் முளைப்பு

*premises* : கட்டடமும் சுற்றுப்புறமும்

*pre–sowing seed treatment* : விதைக்கும் முன் விதைசெய் நேர்த்தி; விதைகளை விதைக்கும் முன்னர் நடத்தும் சிகிச்சை

| | | |
|---|---|---|
| *primary infection* | : | முதல் நிலைத் தாக்குதல் |
| *private hearing* | : | தனி விசாரணை |
| *processing* | : | பதனிடு முறை |
| *producer* | : | உற்பத்தியாளர்; விளைவிப்போர் |
| *progeny* | : | பின்பேறு; சந்ததி |
| *proprietary varieties* | : | உரிமை வகைகள் |
| *protein* | : | புரதம் |
| *proteinase* | : | புரத நொதிகள் |
| *pruning* | : | கவாத்து |
| *pseudostem* | : | போலித் தண்டு |
| *puff* | : | ஊதியிருத்தல்; உப்பியிருத்தல் |
| *pulse beetle* | : | பயறு வண்டு |
| *purchaser* | : | விலைக்கு வாங்குவோர் |
| *pureline seed* | : | தூயவரிசை விதை |
| *pure seed* | : | தூய விதை |
| *purity* | : | தூய்மை |
| *purity analysis* | : | தூய்மைப் பகுப்பாய்வு |
| *purity board* | : | விதைத்தூய்மைக்குப் பயன படும் பெட்டக அட்டை |
| *purity control* | : | தூய்மைக்கட்டுப்பாடு |

## Q

*qualification* : தகுதி

*quality* : குணம்; தரம்

*quality control* : தரக்கட்டுப்பாடு

*quarantine* : தொற்று நோய்க்காகத் தனிப்படுத்தி வைத்தல்

*quartering* : நான்கு சமபாகங்களாக பிரிக்கும் முறை

## R

*'r' line* : 'ஆர்' வரிசை; நிலைவரிசை

*radiation* : கதிர் வீசல்

*radicle* : முளைவேர்

*radio activity* : கதிர் இயக்கம்

*radio isotopes* ; கதிர் அணுக்கள்

*ragi* : கேழ்வரகு; ராகி; கேப்பை

*rainfed crops* : வானாவாரி (மானாவாரி)ப் பயிர்கள்

*rainfed cultivation* : வானாவாரிச் சாகுபடி

*range grasses* : மேய்ச்சல் புற்கள்

*raw seed* : துப்புரவில்லாத விதை

*receptacle* : பாத்திரம்; திரப்பி

*records* : பதிவேடுகள்

*recycling* : திரும்பிவரும் சுழற்சி

*red flower beetle* : சிகப்பு மாவு வண்டு

*rejection from certification* : சான்றளிப்பில் தள்ளிய (விலக்கிய)

*relative humidity* : வானீரப்பசை

*relative temperature disparity* ; வெப்ப உறவு வேறுபாடுகள்

*relay cropping* : தொடர் பயிர்முறை

*release* ; வெளியிடுதல்

*rogue* : வேண்டாத செடிகள்

*representative* : பிரதிநிதி

*representative sample* : மாதிரிப்பொருள்

*research* : ஆராய்ச்சி; ஆய்வு

*resignation* : பதவி விலகல்

*respiration* : சுவாசித்தல்

*return* : வரவு

*revalidation* : மறு மதிப்பீடு

*rhizome* : வேர்த்துண்டு: வேர்க்கிழங்கு

*rice grain moth* : நெல் அந்துப்பூச்சி

*rice weevil* : அரிசி கூன் வண்டு

*ridge* : வரம்பு; மேல்உச்சி; வரப்பு; முகடு

*roll towel* : மடிப்புத்துண்டு

*root apex* : வேர்நுனி

*root cap* : வேர் மூடி

*root hair* : வேர்த்தூவி

*rootlet* : சிறுவேர்

*root nodule* : வேர்முடிச்சு

*root rot* : வேர் அழுகல் (நோய்)

*row intercropping* : வரிசை ஊடுபயிர்

*rub* : தேய்

*rudimentary embryo* : ஆதி விதைக்கரு

*runner* : ஓடு தண்டு

**S**

*sample* : மாதிரி

*sampling* : மாதிரி எடுத்தல்

*sampling error* : மாதிரி எடுத்தலின் தவறு

*saprophytic fungi* : சாறுண்ணிப் பூசணங்கள்

*saw* : ரம்பம்

*scale leaf* : சிதல் இலை

*scarification* : விதைத் தோலைக் காயப் படுத்துதல்

*sealing* : முத்திரையிடுதல்; காற்றுப் புகாமல் மூடுதல்

*search* : சோதனையிடுதல்

*secondary dormancy* : இடைநிலை தூக்க நிலை

*secondary sporidia* : இடைநிலை பூசணவித்துக்கள்

*seed* : விதை

*seed act* : விதைச்சட்டம்

*seed blower* : காற்றுமூலம் பதர்நீக்கும்கருவி

*seed borne disease* : விதைமூலம் பரவும் நோய்

*seed borne fungi* : விதைமூலம் பரவும் பூசணம்

*seed centre* : விதை உற்பத்தி மையம்

*seed certification* : விதைச் சான்றளிப்பு; விதைச் சாத்தளிப்பு

*seed cleaner* : விதைச் சுத்தப்படுத்தும் கருவி

*seed cleaner cum grader* : விதைச் சுத்தம் செய்து தரம் பிரிக்கும் கருவி

*seed coat* : விதை மேலுறை

*seed counter* : விதை எண்ணும் கருவி

*seed dealer* : விதை விற்பனையாளர்

*seed dormancy* : விதைத்தூக்கம்; விதை உறக்கம்

*seed enterprise* : விதை வணிகம்

*seed evaluation* : விதை மதிப்பீடு

*seed generation* : விதைத் தலைமுறை

*seed grower* : விதை உற்பத்தியாளர்

*seed hardening* : விதைச் சிகிச்சை மூலம் கெட்டிப்படுத்துதல்

*seed health* : விதை நலம்

*seed health testing* : விதை நலச் சோதனை

*seed hulling* : விதை அரவை செய்தல்; உமி நீக்கம் செய்தல்

| | | |
|---|---|---|
| *seed increase* | : | விதைப் பெருக்கம் |
| *seed industry* | : | விதை உற்பத்தித் தொழில் |
| *seed infection* | : | விதை நோய்ப்படுதல் |
| *seed law* | : | விதைச் சட்டம் |
| *seedling* | : | நாற்று |
| *seed lot* | : | விதைக் குவியல்;விதைப்பங்கு |
| *seed marketing* | : | விதை வியாபாரம்; விதை வர்த்தகம் |
| *seed multiplication* | : | விதைப் பெருக்கம் |
| *seed processing* | : | விதைச் சுத்தம்; விதைச் சுத்திகரிப்பு |
| *seed producers organization* | : | விதை உற்பத்தியாளர் சங்கம் |
| *seed programme* | : | விதைத் திட்டம் |
| *seed quality* | : | விதைத் தரம் |
| *seed review team* | : | விதைப் பரிசீலனைக் குழு |
| *seed sample* | : | விதை மாதிரி |
| *seed separator apparatus* | : | விதை பிரிக்கும் கருவி |
| *seed shape* | : | விதை வடிவம் |
| *seedsmen* | : | விதை விற்பனையாளர்கள் |
| *seed stock* | : | விதை இருப்பு |
| *seed tag* | : | விதைச் சான்றளிப்பு அட்டை |

| | | |
|---|---|---|
| *seed testing method* | : | விதைச் சோதனை முறை |
| *seed testing terms* | : | விதைச்சோதனைச் சொற்கள் |
| *seed trade* | : | விதை வியாபாரம்; விதை வணிகம் |
| *seed vigour* | : | விதை எழுச்சி |
| *seed weight* | : | விதை எடை |
| *segregation* | : | தனிப்படுத்துதல்; தனிமைப் படுத்துதல்; பிரிதல் |
| *seizure* | : | பறிமுதல் செய்தல் |
| *self -fertilization* | : | தன் கருச்சேர்க்கை |
| *self - pollinatlon* | : | தன் மகரந்தச் சேர்க்கை |
| *semi parasitic fungi* | : | பகுதி ஒட்டுண்ணி இயல்-புடைய பூசணங்கள் |
| *seedling blight* | : | நாற்றுக் கருகல் (நோய்) |
| *seedling rot* | : | நாற்றழுகல் நோய் |
| *severity* | : | கடுமைத் தன்மை |
| *sequential cropping* | : | தொடர் பயிர்முறை |
| *shade tolarant crop* | : | நிழல் தாங்கி வளரும் பயிர்கள் |
| *short duration* | : | குறுகிய வயது |
| *sieves* | : | சல்லடை; அரிதட்டு |
| *silage* | : | பதப்படுத்திய புல்; புல் ஊறுகாய் |
| *silk* | : | சூலிழை |

| | | |
|---|---|---|
| *single floret* | : | ஒற்றை மலர்ப்பிரிவு |
| *soaking* | : | ஊறவைத்தல் |
| *soil fertility* | : | மண்வளம் |
| *solar energy* | : | சூரிய சக்தி |
| *solute* | : | கரைபொருள் |
| *solvent* | : | கரைப்பான் |
| *species* | : | தனிகம் |
| *sprouting* | : | முளைப்பு |
| *spur* | : | பழம் வளரும் கிளை குதிமுள் |
| *stability* | : | உறுதி நிலை |
| *$taff* | : | பணியாட்கள் |
| *stalk rot* | ; | காம்பு அழுகல் (நோய்) |
| *stamen* | : | பூந்தக்காம்பு |
| *standard* | : | தர நிலை |
| *standard seed mixture* | : | தரமான விதைக்கலவை |
| *state seed laboratory* | : | மாநில விதை ஆய்வகம் |
| *sterile* | : | மலடு |
| *sterilised seed* | : | நுண்ணுயிர் தீக்கப்பட்ட விதைகள் |
| *stigma* | : | சூல்முடி |
| *stimulation* | : | கிளர்ச்சியூட்டும் |
| *stomata* | : | இலைத்துளை |

stop saie : விற்பனை விலக்கல்

storage bin ; சேமிப்புக் குதிர்

storage fungi : சேமிப்பு அறைப் பூசணங்கள்

storage time : சேமிப்புக் காலம்

strain ; ஆய்வு வகை

stratification : அமிலச் சிகிச்சை

straw : தட்டை; தாள்; வைக்கோல்

straw yield ; தட்டை அறுவடை; தாள் அறுவடை; வைக்கோல் மகசூல்

strip cropping : அகன்ற வரிசை ஊடுபயிர் முறை

style : சூல் தண்டு

sub section : உட்பிரிவு

sub species : கிளைத் தனிகம்

sulphur dust : கந்தகத்தூள்

supersede : முன் செல்லுதல்

supplying : வழங்குகின்ற

susceptibility : எதிர்த்தாளும் திறனற்ற; எளிதாகத் தாக்கப்படக்கூடிய

surface borne contamination : வெளியில் மட்டும் தொற்றிய நிலை

surface pattern : மேற்பரப்பின் வடிவங்கள்

surplus : உபரி

*symptoms* : அறிகுறிகள்

*synergistic effect* : அனுசரணை விளைவு

*synthetic* : செயற்கையான; தொகுத்த; கலப்பான

*systemic insecticide* : ஊடுருவிப் பாயும் பூச்சி—கொல்லி மருந்து

**T**

*tag* : சான்றளிப்பு அட்டை; காகிதங்களைக் கோர்த்து வைக்க உதவும் துண்டுக் கயிறு; மேற்கோள்; அட்டையுடன் உள்ள கயிறு

*tassel* : மகரந்தக் குஞ்சம்

*temperature sensitive* : வெப்ப உணர்ச்சி உள்ள

*tendril* : பற்றுக்கம்பி

*testa* : விதை வெளியுறை

*tetraploid* : நான்கு நிறத்திரியுடையன

*thalamus* : பூத்தளம்

*theory* : தத்துவம்

*thermodormancy* ; வெப்பத் தூக்கநிலை

*thermodormant seed* : வெப்பநிலைக்கு உறங்கும் விதை

*thermosensitive* : வெப்பத்தில் பாதிக்கப்படக் கூடிய

*tillers* : சிம்புகள்; தூர்கள்

| | | |
|---|---|---|
| *tin* | : | தகரப் பெட்டி |
| *tradesmen* | : | வணிகர்கள் |
| *translucent* | : | அரைகுறையாக ஒளி ஊடுருவிச் செல்கிற; ஒளிச்-சிதறல் |
| *transmission rate* | : | பரப்பும் அளவு |
| *transplanting* | : | இடம் பெயர்த்து நடுதல்; நாற்று நடுதல் |
| *ravelling allowa nce* | : | பயணப்படி |
| *to be transacted* | : | நடைபெற வேண்டிய |
| *to break open* | : | உடைத்துத் திறப்பதற்கு |
| *to carryout* | : | நடத்திவர |
| *to conduct business* | : | தொழில் நடத்த |
| *top dressing* | : | மேலுரம் |
| *total dry matter* | : | மொத்தக் காய்ந்த பகுதி |
| *tougher seed coat* | : | உறுதியான விதையுறை |
| *towel* | : | துணித்துண்டு |
| *transfer* | : | மாற்றம் |
| *treated seed* | : | நேர்த்தி செய்த விதைகள் |
| *tegmen* | : | விதை உள்ளுறை |
| *testa* | : | விதை வெளியுறை |
| *tinged* | : | உப்பிய |
| *trier* | : | குத்தூசி |
| *trueness* | : | உண்மை |

*truthful seed* : உண்மை விதைகள்; மெய்மை விதைகள்; நம்பும் விதைகள்; நம்பகத் தன்மை விதைகள்

*tuber crops* : கிழங்குப் பயிர்கள்

*twiner* : பின்னு கொடி

*type* : விதம்

## U

*ultraviolet rays* : புற ஊதாக் கதிர்கள்

*underground* : பூமிக்கு அடியில்

*ungraded seed* : தரம் பிரிக்காத விதைகள்

*users* : பயன்படுத்துபவர்கள்

## V

*vacuoles* : வெற்றிடங்கள்

*vacuum counter* : வெற்றிடம் உருவாக்கி எண்ணும் கருவி

*variant* : வேறுபட்ட பொருள்

*varietal mixture* : வகைக் கலப்பு

*varietal purity* : வகைத் தூய்மை

*variety* : வகை (ரகம்)

*vegetable* : காய்கறி

*vegetative growth* : தழை வளர்ச்சி

*vegetatively propagated* : தாவரத்தின் மூலம் பெருக்கப்பட்ட

*venation* : நரம்பமைப்பு

| | | |
|---|---|---|
| *vendor* | : | விற்பனையாளர் |
| *vernalization* | : | உறை குளிர் முறை |
| *vertical* | : | செங்குத்தான தளப்பகுதி |
| *viability* | : | முளைக்கும் தன்மை; முளைத்திறன் |
| *viable seed* | : | முளைக்கும் தன்மை கொண்ட விதைகள் |
| *viewing distance* | ; | பார்க்கும் தூரம் |
| *vigour* | : | எழுச்சி |
| *vigour index* | ; | எழுச்சிக் குறியீடு |
| *vigour test* | : | எழுச்சிச் சோதனை |
| *village seed farm* | : | கிராம விதைப்பண்ணை |
| *virus* | : | நச்சுயிரி |
| *volunteer* | : | தொண்டன் |
| *voucher* | : | ஆதாரச்சீட்டு |

## W

| | | |
|---|---|---|
| *water absorbtion* | : | நீர் உட்கொள்ளுதல்; நீர் உறிஞ்சுதல் |
| *water extract* | : | நீர்ப்பிழிப்பு |
| *Water holding capacity* | : | மண்ணின் நீர் கொள்ளும் திறன் |
| *water sensitivity* | : | நீர் உணர்ச்சியுள்ள |
| *water soluble* | : | நீரில் கரையும் |

*weed content* : உள்ளடக்கிய களைவிதைகள்

*wettable sulphur* : நனையும் கந்தகம்

*white rust (disease)* : வெண்சொரி நோய்

*width* : அகலம்

*withering* : வாடுதல்

*wood* : கட்டை

*wrapper* : உறை, அட்டை

*wrinkled* : சுருங்கிய

## X

*xenia* : பூந்தாண்மை

*xerophyte* : வரட்சித் தாவரம்

*x-rays* : எக்ஸ் - கதிர்கள்; புதிர்க் கதிர்கள்

*x-ray photographic method* : எக்ஸ் - கதிர் நிழற்படமுறை

*x–ray technique* : எக்ஸ் – கதிர் தொழில் நுணுக்கம்

## Y

*yard* : . ஒரு நீட்டலளவை; மூன்று அடிகள் கொண்ட பிரிட்டிஷ் அளவு கோல்

*yarn* : நூல்; சரடு; புரி

*yew* : ஒரு வகை ஊசியிலைமரம்

*yield* : விளைச்சல்; மகசூல்

# டாக்டர். உ. அஞ்சனம் அழகன் எழுதிய அறிவியல் நூல்கள்

- பழவளம்
- மாமரமும் வளர்ப்பு முறைகளும்
- மாதுளை
- மாம்பழம்
- காட்டுவளம்
- திசுவறை மரபியலும்
  பயிர்ச் சேய்ப்பெருக்கமும்
- பயிர்ப் பெயர் அகர வரிசை-1
  மணம் ஊட்டும் பயிர்களும்
  மலைத் தோட்டப் பயிர்களும்

Wrapper Printed at - Babu Printers Madurai - Ph: 24122